# டென்மார்க்கில் ஈழத்தமிழர் ஆர்ப்பாட்டப் பேரணி

[ஹேபன்ஹேகன்]

டென்மார்க்கின் தலைநகர் ஹோபன் ஹேகனில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் பேரணி யொன்றை நடாத்தஅங்குள்ள ஈழத் தமிழர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்

உலக சமூக அபிவிருத்திக்கான டென்மார்க் உச்சி மாநாட்டுக்காக 120 நாட்டுத் தலைவர்கள் அந்நாட்டு தலைநகரான ஹோபன் ஹேகனில் கூடியிருக்கும் இவ்வேளையில் இந்தப்பேரணிக்கு திட்டமிடப் பட்டுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கைக்குழு ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நேற்று முன்தினம் அங்கு சென்றுள்ளது. கடந்த திங்கட்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 28 இதழ் 30
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 12-3-1995

## 3 கட்ட பேச்சிலும் பிரயோசனமில்லை

[கொழும்பு]

அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் இதுவரை நடைபெற்ற 3 கட்டப் பேச்சுக்களிலும் எவ்வித பிரயோசனமான விளைவும் உருவாகவில்லை என விடுதலைப்புலிகள் கருதுகிறார்கள்.

இவ்வாறு கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

இப்பேச்சுக்களில் உருப்படியான எதுவும் ஏற்படாத போதிலும் நாலாம் கட்டப் பேச்சுகளுக்கான திகதியை

(4ம் பக்கம் பார்க்க)

# அரசின் போக்கில் மாற்றம்;

# 4-ம் கட்டப் பேச்சு கொழும்பில்;

# புலிகள் அங்கு வர வேண்டும்!

## பாலபத்தபெண்டி கூறுகிறார்

[கொழும்பு]

நாலாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு கொழும்புக்கு வருமாறு அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. இதற்கான புலிகளின் பதிலை அரசு எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதியின் செயலரும், புலிகளுடனான சமாதானப் பேச்சில் அரச பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை தாங்கியவருமான திரு. கே. பாலபத்த பெண்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் அப்பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

இந்தப் பேச்சுவார்த்தை முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டபோது இன்றைய ஜனாதிபதி அவர்கள் அன்று நாட்டின் பிரதமர் என்றவகையில் சில முக்கிய விடயங்கள் தொடர்பாக எனக்கு ஆலோசனை வழங்கினர்.

விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருந்த சூழ்நிலையில் சமாதானத்தை உருவாக்குவதற்கு முதலில் இரு சாராருக்குமி டையே புரிந்துணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். முதலில் நல்

(2ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கடலில் 3 மீனவர் கைது

[யாழ்ப்பாணம்]

வடமராட்சிக் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தமூன்று மீனவரை நேற்றுக்காலை கடற்படையினர் கைதுசெய்து படை முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

தற்போது அமுலில் உள்ள போர் இடை நிறுத்தத்தை மீறும் செயலாகவே கடற்படையினர் இந்த செயலை செய்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கடலில் நேற்றுக்காலை மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை நோக்கி பீரங்கிப் படகில்வந்த கடற்படையினர் மூன்றுமீனவர்களை பிடித்து தமது படகில் கொண்டு சென்றுள்ளனர். இச்சம்பவம் கரைக்கு மிகச் சமீபமாக நடைபெற்றுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவநலன்களுக்கே அரசு முதன்மை கொடுக்கின்றது

- பி. பி. ஸிக்கு அன்ரன் பாலசிங்கம் பேட்டி -

(லண்டன்)

தமிழர்களுக்கு தமது சொந்த தாயகத்தில் சுயாட்சியை உறுதி செய்யும், கணிசமான அளவு தன்னாட்சி வழங்கும் ஐக்கிய இலங்கையில் சமஷ்டி அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்று உருவாகுமாகுமானால் அதனை ஏற்று, அதற்கு மாறுதலாக தமது நீண்டகால கோரிக்கையான தனிநாடு கோரிக்கையை கைவிடத் தயார் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக பி.பி.சி. தெரிவித்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

[யாழ் பாணம்]

விசேட வைத்திய சிகிச்சை பெறுவதற்காக கொழும்பு செல்வதற்கு வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளிகள் கபபல் பயணத்திற்கு பதிவு செய்வதற்கான அடையாள அட்டை மற்றும் ஆவணங்

(4ம் பக்கம் பார்க்க)

## டென்மார்க்செல்லும்முன்னர் சந்திரிகா பிரபாவுக்கு கடிதம்

(கொழும்பு)

டென்மார்க் செல்லமுன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சமாதானப் பேச்சின் அவசியம் பற்றி ஜனாதிபதி அக்கடிதத்தில் வலியுறுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சமாதானப் பேச்சை தொடர்வதற்கு அரசின் போக்கே பெரும் தடையாக இருப்பதாகவும், இந்த முட்டுக்கட்டையை போக்க அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் கூறி விடுதலைப்புலிகள் ஜனாதிபதிக்கு பல கடிதங்கள் அனுப்பியிருந்ததும்—

வெளிநாட்டு மத்தியஸ்தர் ஒருவர் மூலம் இருவரும் பேச்

(4ம் பக்கம் பார்க்க)

## பரீட்சார்த்திகளுக்கான படகு சேவை ஒழுங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கை நிர்வாகசேவைப் பரீட்சைக்கும், இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்கும் கொழும்புக்கு செல்லவிருக்கும் பரீட்சார்த்திகள் அனைவருக்கும் படகு ஒழுங்குகள் எதிர்வரும் 15-ம் திகதி [புதன்கிழமை] ஒழுங்கு செய்

(4ம் பக்கம் பார்க்க)

பிள்ளைகளின் விடுதலைகோரி

## யுத்தக்கைதிகளின் பெற்றோர் சாகும்வரை உண்ணாவிரதமிருப்பர்

[கொழும்பு]

தற்பொழுது சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் 16 யுத்தக் கைதிகளையும் விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்காதுபோனால் அவர்களின் பெற்றோர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர்.

நேற்று கொழும்பு செஞ்சிலுவை சங்க மண்டபத்தில நடைபெற்றபத்திரிகையாளர் மாநாட்டிலேயே பெற்றோர்கள் இந்த முடிவை எடுத்ததாக வெரித்தாஸ் சிங்கள சேவை தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தில் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளை விடு

(4-ம் பக்கம்பார்க்க)

## யுத்த விமானம் மன்னாரில் நோட்டம்

[மன்னார்]

விமானப்படை யுத்த விமானமொன்று நேற்று முன்தினம் மன்னாரில் பல பகுதிகளையும் சுற்றி வட்டமிட்டு வெகு நேரம் நோட்டமிட்டுள்ளது.

அடம்பன், வட்டக்கண்டல், முருங்கன், சிலாவத்துறை, பரப்புக்கடந்தான், ஆண்டான்குளம் ஆகிய பகுதிகளைச் சுற்றியே இந்த விமானம் வட்டமிட்டு நோட்டமிட்டுள்ளது.

அதிகாலை 4-20 மணி முதல் 4-50 மணி வரை சுமார் அரை மணி நேரம் நோட்டமிட்டு சென்றுள்ளது. —சி

### வரி விளம்பரம்

**MATHS O/L 95**

Distinction Credit பேறடைய ஆரம்பத்திலிருந்து (ஆண்டு - 9, 10) உட்பட அனுபவமுள்ள B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, மணல்தறை லேன், திருநெல்வேலி. (சி-1410)

**வைத்தியம்**

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1397)


### ★ கிரிக்கெட்

# உலக மாஸ்ரேஸ் கிண்ண இறுதியாட்டம் இன்று

(பம்பாய்)

உலக மாஸ்ரேஸ் (35 வயதிற்கு மேற்பட்டவர்கள்) கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் இன்று பம்பாயில் நடைபெறவுள்ளது இந்த ஆட்டத்தில், இந்திய-மேற்கிந்திய அணிகள் மோத உள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் மேற்கிந்திய அணி தென்னுபிரிக்க அணியை 96 ஓட்டங்களால் வென்று, இறுதிப் போட்டிககுத் தகுதி பெற்றுள்ளது முதல் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா 36 ஓட்டங்களால் இங்கிலாந்தை வென்று இறுதி ஆட்டத்திற்குத் தகுதியானது.

ஆறு நாடுகள் பங்குபற்றும் இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டும் முதல் அணிக்கு ரூபா ஐந்து லட்சம் வழங்கப்பட உள்ளது. -சி

ஜெர்மனியில்

# பாரிய எரிகல் நிலத்தில்விழ்ந்தது

[மியூனிச்]

ஜெர்மனியில மியூனிச் நகரினிலே பாரிய எரிகல் ஒன்று சதுப்பு நிலப்பகுதியிலே விழுந்துள்ளது.

கடந்த வாரம் இவ் எரிகல் மியூனிச் நகரருகே விழுந்தது. இது விழுந்த இடத்தில் 20 மீட்டர் விட்டமும் 6 மீற்றர் ஆழமும் கொணட டாரிய குழி ஏற்பட்டுள்ளது.

எரிகல் விழுந்த இடத்தில் ஏற்பட்ட நீர் ஊற்றுக்கள் 150 மீற்றர் உயரமளவிற்கு நீரை விசிறி அடித்தன. சுற்றுப்புறத்தில் இருந்த இடத்தில் 200 மீற்றர் விட்டத்திற்கு பனிக் கட்டிகள் உருகியுள்ளன.

வருட மொன்றுக்கு 100 கிறும் நிறையுள்ள 19 ஆயிரம் எரிகற்கள் பூமியில் மோதுவதாக விண் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(கே-சி)

தென் ஆபிரிக்கா

# அமைச்சரவையிலிருந்து

### வின்னி மண்டேலாவிற்கு கல்தா?

[ஜோகனஸ்பேர்க்]

தென்னுபிரிக்க அரசின் அமைச்சர்களில் ஒருவரான வின்னி மண்டேலா அரசியலில் இருந்து அகற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கலை, அறிவியல், கலாசார அமைச்சராகப் பதவி வகிக்கும் இவர், லஞ்ச ஊழல், அவதூறு சம்பந்தமான குற்றச்சாட்டுகளுக்காகவே அரசியலில் இருந்து ஓரங்கட்டப் படவுள்ளாராம்.

தமது பதவி நீக்கம் சம்பந்தமாக ஜனதிபதி நெல்சன் மண்டேலாவை சந்திக்கச் சென்ற போது, மண்டேலா இவரைச் சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டார் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன,

வின்னி மண்டேலா. அதிபர் நெல்சன மண்டேலாவின் முன்னுள் மனைவி என்பதும் குறிப்பிடத்தக்கது. ம-சி


''நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிககுக''

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவம்

**பங்குனி உத்தரப் பொங்கல்-1995**

மேற்படி பொங்கல் எதிர்வரும் 17-03-95 (வெள்ளிக்கிழமை) பகலும் இரவும் நடைபெறும். இவ்வருடம் 15-03-95 புதன்கிழமை புத்தூர்ச்சந்தி மரவடியில் இருந்து பண்டம் கொண்டு செல்ல திருவருள் கூட்டியுள்ளது. ஆகவே அடியார்கள் தங்கள் நேர்த்திகளை 12-03-95 தொடக்கம் 15-03-95 வரை சாவகச்சேரி, கொடிகாமம், பளை ஆகிய சந்தைகளிலும் கண்டி வீதி வழியாக இடம்பெறும் பண்ட ஊர்வலத்திலும் தங்கள் நேர்த்திகளை நிறைவு செய்யுமாறு வேண்டுகிறோம். அடியார்களின் போக்குவரத்து வசதிகருதி அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

முக்கிய குறிப்பு:

கிளாலியூடாக பண்டம் கொண்டுசெல்லவுள்ளதால் இளநீர் தவிர்ந்த ஏனைய நேர்த்திகளை ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி

இவ்வண்ணம்

பரிபாலன சபையினர்

புளியம்பொக்கணை.

(சி-1413)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**மகாபொல கொடுப்பனவு 1993/94**

[ 1-வது தவணைப் பணம் ]

சிரேஷ்ட மாணவர்களுக்கான மகாபொல முதலாந் தவணைப் பணக் கொடுப்பனவு யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கொடுப்பனவுக்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்

(ஏ-4816)


### வருடாந்த திருவிழா

(அரியாலை)

யாழ். நல்லூர் பாணன் குளம் நாச்சியம்மன் ஆலயவருடாந்த திருவிழா கடந்த 5ந் திகதி கொடிஏற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் 18ந் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 19ந் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (69)

### பஸ்—வான் விபத்தில் 23 பேர் பலி

(இஸ்லாமபாத்)

மேற்குப் பாகிஸ்தானில் இடம்பெற்ற பஸ்-வான் விபத்து ஒன்றில் 23பேர் இறந்துள்ளனர். அத்தோடு 11 பேர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [ம]

# அரசின் போக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லெண்ணத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது

வடமாகாணத்தில்வாழும்மக்களுடைய வாழ்க்கை கஷ்டங்களை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்று ஜனதிபதி விரும்பினர்.

பன்னிரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து யுத்தம் நிலவிய காரணத்தால் இந்த பிரதேசத்தின் அபிவிருத்தி மிகவும் பலம் குன்றிய நிலையிலே காணப்பட்டது. மின்சாரம், போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை விவசாயம் பாதிக்கப்பட்டிருந்தது சுகாதாரம் மிகமோசமான நிலையையடைந்திருந்தது. இந்த பிரதேச மக்கள் பல பிரச்னைகளை எதிநோக்கியிருந்தார்கள்.

ஆகவே இந்தப் பிரச்னைகளையும் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப் புலிகளுடன் நாம் கலந்துரையாடினேம். முதற்கட்டப் பேச்சுவார்த்தையில் இரு பிரச்னைகள் குறித்தும் கலநது ஆலோசித்தோம்.

விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரில் நாம் யாழ்ப்பாணத்திற்கு செல்லவில்லை என்பதை நாம் எல்லோருமறிவோம். ஜனதிபதியின் விருப்பத்தின் பேரிலேயே நாம் யாழ்ப்பாணம் சென்றோம். சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு நாம் யாழ்ப்பாணம் சென்றோம்.

நாம் யாழ்ப்பாணம் செல்வதற்கு முன்னர் அங்கு நாம் நிறைவேற்றவேண்டிய தேவைகளையிட்டு சகல அமைச்சுக்களோடும் கலந்து ஆலோசித்தோம்.

இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு சிறிது தாமதமாகி நாம் செல்ல நேர்ந்தாலும் ஒரு அபிவிருத்தித் திட்டத்தை நாம் விடுதலைப் புலிகளுக்கு சமர்ப்பித்தோம், இந்த அபிவிருத்தித் திட்டத்தை முழுமையாக அமுலபடுத்துவதற்கு 39,000 மிலலியன் ரூபா தேவைப்பட்டன. இது ஒரிரு மாதங்களில் அல்லது ஒரிரு வருடங்களில் பூர்த்தியாகும் திட்டமாக அமையாது. பூரணத்துவம் வாய்ந்த அபிவிருத்தித் திட்டமாகவே இருந்தது.

இந்த இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையின் போது நாம் எடுத்துச் சென்ற அபிவிருத்தித் திட்டத்தை விடுதலைப் புலிகள் நன்கு ஆராய வேண்டுமென எடுத்துக் கூறினுர்கள்.

நாம் இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தை நடத்தச் சென்ற பொழுது பகைமை நிறுத்தும் நடவடிக்கைகளையும் அமுல்படுத்தவேண்டும் என்று எடுத்துக் கூறினேம். இதறகாக பல தீர்வுகள் அடங்கிய ஒரு ஆவணத்தையும் நாம் முன்வைத்தோம். ஏழு நிபந்தனைகள் அடங்கியஉடன படிக்கையும் ஒரு பிரதியையும் சமர்ப்பித்தோம். இந்த நிபந்தனைகளிலேஉள்ளடக்கப்பட்ட விடயங்களை நாம் விடுதலைப் புலிகளோடு மிக ஆழமாகக் கலந்துரையாடினேம். ஒருசில திருத்தங்களுடன் இந்த நிபந்தனையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொண்டார்கள்.

நாங்கள் பகைமை நிறுத்தத்தை பகிரங்கப்படுத்தும் தினத்தில் இருசாராரும் அப்போதிருந்த நிலைகளிலே இருக்க வேண்டும். அந்த நிலைப்பாட்டை இருசாராரும் மாற்றமுடியாது என்று நாம் உடன்பட்டோம். இதனை ஒரு முதல் நிபந்தனையாக ஏற்றுக் கொண்டோம்.

இந்த உடன்படிக்கையின் படி இன்று விடுதலைப் புலிகள் இருக்கும் பாதுகாப்பு வலயத்தினுள் அவர்கள் தொடர்ந்தும் இருத்தல் வேண்டும். அரசாங்கமும் இராணுவமும் அவர்கள் நிலைகொண்டுள்ள பாதுகாப்பு வலயத்தில் அவ்வாறே இருக்கவேண்டும். என நாம் உடன்பாடு கண்டோம்.

வடக்கு-கிழக்கு கடலோரப் பிராந்தியங்களைப் பொறுத்த வரையிலே மீன்பிடிப்பதற்கான ஒரு எல்லை வரையறுக்கப்பட்டது இந்தக்குறிப்பிட்ட எல்லைப் பிரதேசத்தில் மீன் பிடிக்கவும் படகுகள் நடமாடவும் முடியும்.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நேர்மையாக நடந்து கொள்ளவேண்டும் என்றும் உடன்பாடு காணப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி நாம் இரு சாராரும் எந்த ஒரு சட்டததிலும் உடன்படிக்கைகளை மீறினல் அதனைக் கண்காணிப்பதற்கு குழுக்கள் அமைக்கப்படவேண்டும் என்றும் உடன்பாடு கண்டோம். ஆறு குழுக்களை நியமிப்பதற்கு நாம் தீர்மானித்தோம். வடக்கிலும் கிழக்கிலும்குறிப்பிட்ட பிரதேசங்களுக்கமைய இந்தக் குழுக்களை அமைக்கவும் தீர்மானித்தோம்.

இதனிடையே கிழக்கு மாகாணத்தில் ஒரு பிரச்னை ஏற்பட்டுவிட்டது கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களுடன் நடமாடக்கூடாது என்றும் அவர்களுக்கு தேவையான பாதுகாப்பு உணவு வசதிகளையும் ஏனைய வசதிகளையும் செய்து கொடுப்பதாக இராணுவம் அவர்களுக்கு எடுத்துக் கூறியது.

அவர்களுக்கு தேவையான உணவு போக்குவரத்து வசதிகள் என்பனவற்றையும் எமது அரசாங்கம் செய்யக் காத்திருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனல் இது தொடர்பாகக் கருத்து வேறுபாடு நிலவியது எனவே எமது பிரதிநிதி ஒருவரை கிழக்கு மாகாணத திற்கு அனுப்பி உரிய தகவல்களைப் பெற்ற பின்னர் இது தொடர்பாக முடிவு செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நாம் ஒரு இராணுவ பிரிகேடியரை கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைத்தோம் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பிராந்திய தலைவர்களோடு கலந்தாலோசித்து உடன்பாடு காணுமாறும் அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. எமது நிபந்தனைகளின்படி இத்தகைய முரண்பாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் இராணுவத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும் பிரச்னை ஏற்பட்ட பிரதேசத்தில் ஒன்று கூடி கலந்தாலோசித்து சிக்கல்களுக்கு திர்வு காண வேணடுமென்பதே எங்களுடைய சமாதான நடவடிக்கைகளின குறிக்கோளாகவும் இருந்தது.

இதற்கான தகவல் பரிமாற்றமும் எந்தெந்த இடங்களில் பேசவேண்டுமென்பது பற்றியும் நாம் சிநேக பூர்வமாக தீர்மானத்திருந்தோம்.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே முரண்பாடுகள் தொடர்பாக ஒரு முடிவுக்கு வரமுடியாத பட்சத்தில் மாத்திரமே அத்தகைய உடன்படிக்கை மீறல்கள் சமாதானக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டிருந்தது.

ஆயுதம் தரித்து நடமாடக் கூடாது என்றும் உடன்பாடு காணப்பட்டது. அப்படி நடமாடுவதாக இருந்தால் இலங்கை அரசாங்கத்தின் இராணுவ முகாங்களுக்கு வருகை தந்து அவர்களுடன் கலந்தாலோசித்த பின்னர் அவ்வாறு நடமாடலாம் என்றும் உடன்பாடு காணப்பட்டது.

இந்த உடன்படிக்கை சிறப்பாக நடைமுறைப்படுத்தப் பட்டது. கிழக்கு மாகாணத்தில்தான் இவ்வாருக ஆயுதம்

(4ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

இலட்சியத்தைச் சாதிப்பதில் சிரமங்கள் இருக்கலாம். அந்தச் சிரமம் எதில் இருக்கிறதோ, அதைச் சாதிப்பதுதான் உண்மையான சாதனையாகும். —ராஜாஜி.

## நமது நோக்கு

### கிழக்கிலே அமைதியா?

''சமாதானம் பற்றிப் பேசுகிறீர்கள்; ஆனால் இங்கு சமாதானமே இலலேயே!'' —இப்படி வெட்டொன்று துண்டொன்ருக மட்டக்களப்பில் கூறியவர் யார்?

மட்டக்களப்பு சமாதானக் குழுவின் தலைவர் மில்லர் பாதிரியார்தான்!

சமாதானப் பிரசாரம் செல்வதற்காக, தேசியச் சமாதானக் குழு கொழும்பிலிருந்து அங்கு சென்றது.

அந்தக் குழுவுக்கு யதார்த்த நிலையை உணர்த்துவதற்காகத்தான், உறைப்பாகச் சில கருத்துக்களை அவர் சொல்லவேண்டி ஏற்பட்டது.

சமாதானக் குழுவின் தலைவரான அவரது வளவிலிருந்தே, 25 தென்னை மரங்கள் தறிக்கப்பட்டன

அப்படியாயின்— சாதாரணப் பொதுமக்களின் நிலை என்ன?

ஏன் தறிக்கப்பட்டன? எதற்காகத் தறிக்கப்பட்டன?

இராணுவத்தினரால் பாதுகாப்பு அரண்கள் அமைக்கவெனத்தான் பொருளாதாரப் பயன் தரும் மரங்கள் தறிக்கப்பட்டிருந்தன.

இப்படி —பொருளாதாரச் சிரழிவுகள் பல, பாதுகாப்புக காரணங்கள் காட்டி ஏற்படுத்தப்பட்டன. இதனுல் மக்களுக்கு ஏற்பட்ட வேதனைகளைப் போக்கி இயல்வு வாழ்வுக்கு வழி காணுது சமாதானம் பற்றிப் பேசுவதால் பயன் உண்டா?

அது மாத்திரமல்ல, பொது வீதிகளிலே இராணுவம் பல முகாம்களை அமைத்ததால், மக்கள் படும் துயரங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள் ளன.

முகாம்களுக்கு முன்பாக உள்ள வீதிகளால் மக்கள் போய் வரமுடியாத நிலை.

பரிசோதனைகளுக்காக —வாகனங்களை விட்டிறங்கிய மக்கள், சுடுமணலில் செல்லும் காட்சிகள் இன்னும் ஓயவில்லை.

சந்தேகங்கள்— அதனுல் சுற்றிவளைப்புக்கள்!

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் மக்கள் படும் வேதனைகளை மூடி மறைத்துவிட்டு, சமாதானம் பற்றிப் பேசுவதால் பயன் உண்டா?

ஜெட் வேகத்தில் சமாதானப் பிரசாரம் நடக்கிறது. ஆனுல் மக்களின் துயரங்கள் போக்கி, இயல்பு வாழ்வு ஏற்படுத்தும் வேகமோ. நத்தை வேகம்தான்!

## ★ தமிழக அகதிகள் கொண்டுவந்த
# பல கோடி ரூ. பெறுமதியான பொருட்கள் பறிமுதலானது

(கொழும்பு)

தமிழகத்தில் இருந்து நாடு திரும்பிய இலங்கைத் தமிழ் அகதிகளின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இது பற்றி தெரியவருவதாவது: தமிழகத்திலிருந்து திருமலை திருப்பிய 379 அகதிகள் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்ளுடன் திருமலையிலுள்ள உப்புவெளி அகதிமுகாமை வந்தடைந்தனர்.

இதையடுத்து கொழும்பிலிருந்து வந்த சுங்க அதிகாரிகள் குழு உட்புவெளி அகதிமுகாமை முற்றுகையிட்டு தீவிரசோதனைகளை நடாத்திய போது அங்கிருந்த பொதிகளில் 40 பொருட்களுக்கு உரிமை கோரப்படவில்லை. அகதிகளாக தமிழகம் சென்ற இவர்கள் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்களுடன் எப்படித் திரும்பினுர்கள் என்ற ஆச்சரியம் சுங்க அதிகாரிகளிடம் எழுந்துள்ளதாம்.

இதையடுத்து தமிழ் அகதிகளிடம் பறிமுதல் செய்யப்பட்ட கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான 118 பொதிகளை 3 லொறிகளில் கொழும்புக்கு ஏற்றிக் கொண்டு சுங்க அதிகாரிகள் சென்றுள்ளனர்.

தமிழகத்தில் அகதிகளாக இருந்தகாலத்தில் தாங்கள் உழைத்துச் சேமித்த இப்பொருட்களை திருப்பி தம்மிடம் ஒப்படைக்குமாறு தமிழ் அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். - சி

## தொழில் வாய்ப்பை மறுப்பதும்
# மனித உரிமை மீறலே - அமைச்சர் தர்மசிறி

(கொழும்பு)

அரசியல் காரணங்களுக்காக ஒருவரின் தொழில் வாய்ப்பை மறுப்பது மனித உரிமைகளை மீறும் செயலாகும். அரசு இதனை மனதில் கொண்டுதான் அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கப்பட்டவர்களுக்கு நிவாணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசியல் பழிவாங்கல் முறைப்பாடுகளை பிரதி அமைச்சர்களிடம் கையளித்த சமயம் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்,

பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வு காண்பது சிரமம். ஆனுல் இதற்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் மட்டத்திலான குழுக்கள் மூலம் இந்தத்தீர்வு துரிதப் படுத்தப்படும் என்றுர்.

அரசியல்பழிவாங்கல்காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் 25,000ற்கும் மேற்பட்ட புகார்கள் பிரதி அமைச்சர்களிடம் கையளிக்கப்பட்டது. -சி

## மட்டக்களப்பு எல்லையில்
# தமிழர் வயல்களில் சிங்களவர் அத்துமீறி பயிர்ச்செய்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு எல்லைப் புறத்திலுள்ள தமிழர்களின் வயல்களில் சிங்களவரே தற்போது பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எல்லைப்புறங்களில் ராணுவ முகாம்கள் பல இருப்பதனுல் அவ்விடங்களிலுள்ள படையினர் தமிழ் விவசாயிகளை துரத்திவிட்டு அவ்வயல்களை குடியேற்றப்பட்ட சிங்களவருக்கு வழங்கியுள்ளனர். இவ்வாறுபெரும்ஏக்கர் தமிழர்களின் வயல்கள் சிங்களவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனுல் தமிழ் விவசாயிகள் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இது பற்றி அவர்கள் மட்டக்களப்பு அரச அதிபருக்கும் படை அதிகாரிகளுக்கும் புகார்கள் தெரிவித்தும் எதுவுமே பலனளிக்கவில்லையாம்.

இதேவேளை மட்டக்களப்பில பல பகுதியிலும் தமிழ் விவசாயிகளின் பயிர்ச் செய்கைக்கு படையினர் பல்வேறு கெடுபிடிகளையும் போட்டுவருகிறுர்களாம். -சி

### பலதும் பத்தும்

#### புகையிலை:

'புகையிலைப் புராணம்' என இங்கு எழுதியிருந்தோமல்லவா? இசையாசிரியை திருமதி க. அருள்மயம் அனுப்பிய தகவல் இது;

சுவிடன் நாட்டுப் பெண்மணி ஒருவர் 30 ஆண்டுகளாகப் புகைபிடித்து வந்தார். 52வது வயதில் நுரையீரல் புற்று நோயால் இறந்தார். அவர் கீழ் முதுகு வலியாற் பல ஆண்டுகள் வேதனைப் பட்டு வந்தவர்.

''உங்களது சிகரெட்டால் மனைவியை இழந்தேன்!'' எனக் கணவர் சிகரெட் தயாரிப்பு நிறுவனத்திற்கு எதிராக வழக்குப் போட்டு நட்ட ஈடும் பெற்றுர்.

இறந்த பின்... வழக்கு... நட்டஈடு என்ற சிக்கல்களைத் தவிர்க்க புகையிலைப் பழக்கத்தை முதலிலேயே விட்டு விடுதல் நல்லதல்லவா?

— மயூரன்

## இராசி பலன்

12–3–1995

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு மாசி –28)

தசமி காலை 7-34 வரை; புனர்பூசம் முன்னிரவு 7-11 வரை சித்தயோகம், இராகு காலம் மாலை 4-53 முதல் 6-23 வரை, சுபவேளை காலை 9-23 முதல் 10-53 வரை.

மேடம்: முடிவற்ற பிரயாசம், காரியசித்தி. விவேகம்

இடபம்: முதியோர்கோபம், மனவெறுப்பு, அலைச்சல்.

மிதுனம்: பிதாசிந்தை, தன விரயம், புத்திரர் கவலை.

கடகம்: கற்பனை, கடன் வசூல், தியானசிந்தை.

சிங்கம்: சுபகாரியம், உறவினர் பெருமை, உபசாரம்.

கன்னி: மறக்க முடியாத நிகழ்வு, உல்லாசம், பணவரவு

துலாம்: மனசஞ்சலம், அதிகாரிகள்கோபம், காரியதடை.

விருச்சிகம்: குடும்ப வேற்றுமை, பழிவாங்கப்படல், யோசனை.

தனுசு: பண்பான வரவேற்பு மாமனுர் அறிவுரை, தெய்வீக வழிபாடு

மகரம்: தொழில் உறவு குடும்டசுகம், கலகலப்பு.

கும்பம்: பணிந்து மோதல், சுபனசுககுறைவு மனகுமுறல்.

மீனம்: வீண்கர்வம், மனத் துயரம், பணக்கஷ்டம்.

— ஜோஸ்யர்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–03-12
ஞாயிறு இரவு

08-01 இசையரங்கம்—பி. எஸ். பிச்சையப்பா அவர்களின் ''இராகமாலிகா'' இசை நிகழ்ச்சி
08 30 செய்திகள்
08-40 தொடர் நாடகம்— கருணைரவி எழுதும் ''காணிநிலம் வேண்டும்''

1995-03-13
திங்கள் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

### தமிழீழ வானெலி நிகழ்ச்சி நிரல்

1995-03-12
ஞாயிறு மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதினவை
05-15 மழலைகளுக்காக
05-30 கதம்பம்
06-00 சிந்தனைக்குச் சிலவினுடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்,

### இலவச வைத்தியசாலை

(கொழும்புத்துறை)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று சண்டிலிப்பாய் மேற்கு மணிகோகன் சன சமூக கட்டடத்தில் வாரத்தில் நான்கு நாட்கள் இயங்கி வருகின்றது. - 154

### மலத்தியோன் விசிறப்பட்டது

(நெல்லியடி)

மலேரியா நோயைக்கட்டுப்படுத்தும் நோக்கில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் 2ம் கட்டமாக மலத்தியோன் வடமராட்சி கிழக்கிலுள்ள மூன்று அகதிகள் முகாமில் விசிறப்பட்டது.

### தெய்வீகப் பேருரை

(அரியாலை)

யாழ். வண்ணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் தற்பொழுது திருவிழா நடைபெறுவதையொட்டி கம்பகலா சுரபி த- சிவகுமாரன் இராமாயணம் பற்றிய தெய்வீகப் பேருரையை இரவு 8-30 மணிமுதல் 9-30 மணிவரை நிகழ்த்தி வருகிறுர். 59

## இன்று

(பருத்தித்துறை)

இந்துக் கோவில்களின் நிர்வாகத்தை நடாத்திவரும் ஆலயசபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்அவற்றிற்கான பரிகாரங்களும் பற்றிய கலந்துரையாடலொன்று இன்று 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய திருஞானசம்பந்தர் மடத்தில் நடைபெறுகின்றது. 52

0 0 0

(பருத்தித்துறை)

வல்வைசிவகுருவித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் ரீ. தவேந்திரராஜா தலைமையில் இன்று 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது. பிரதேசசெயலர் திரு. ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறுர். 52

0 0 0 0

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் .(வ து) யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவு பிராந்திய சபையின் பொதுச்சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு சபையின் தலைவர் திரு, யோ. எட்வேட்ஸ் தலைமையில்யாழ்-குருநகர் சென்றோக் சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தில் இடம் பெறும். 154

0 0

(கொழும்பு)

உலகத் தமிழ்க் கவிதைப் பரிசில்கள் வழங்குதலும் நூல் வெளியீடும் சிறப்பு நிகழ்ச்சி இன்று 12ம் திகதி பி-ப 5-30 மணிக்கு கொழும்புத் தமிழ் சங்கத்தில் கொழும்புத் தமிழ் சங்கத் தலைவர் செ. குணரத்தினம் தலைமையில் நடைபெறும்.

### தவக்கால நற்சிந்தனை

''முடிவில்லா வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன'' (அரு. 6: 68ஆ)

நிலையில்லாத இவ்வுலகில் வாழும் எமக்கு, நிலையான நித்திய பேரின்பம் தரவல்ல பரகதியை அடைவதற்கு வார்த்தை வடிவான இறைவன் தம் வார்த்தைகளாலே எம்மை வாழ்விக்கின்றுர். அந்த வார்த்தைகளை வாழ்வில் நாளும் கொள்வோம். அவை எம்மை வாழ்விக்கும் உயிர் ஊட்டும்.

— தா. மைதிலி

சுத்தக் காற்று சுற்றிலும் நிலவிட
நித்தம் ஒரு மரம் நடுவோம்

# அரசின் போக்கில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏந்தியபடி நடமாட்டங்கள் காணப்பட்டன இந்த முரண்பாடான நிலைமை பேச்சுவார்த்தையின் மூலம் வெகு சுமுகமான முறையில் கையாளப்பட்டது.

இதன் பின்னர் இராணுவமோ விடுதலைப் புலிகளோ முறைப்பாடு எதுவும் செய்யவில்லை ஆனால் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த விடுதலைப் புலிகள் இந்த நிபந்தனை ஒரு செல்லுபடியான நிபந்தனையாக ஏற்க முடியாதெனக் கருத்து தெரிவிததனர். எமது ஆரம்ப உடன்படிக்கை ஜனாதிபதியினாலும் விடுதலைப் புலிகள் இயக்க தலைவராலும் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையாகும். இரண்டாவது குறிப்பிடப்பட்ட உடன்படிக்கை இராணுவ தலைவர்களுக்கும் விடுதலைப் புலிகளின் பிராந்திய தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு தற்காலிக உடன்படிக்கை என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

ஆகவே முதலில் கையெழுத்திட்ட உடன்படிக்கையை எவ்வாறு அமுல்படுத்துவது என்பதுபற்றி தீர்மானிப்பதற்கு உடனடியாக ஒரு பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் கோரினார்கள். குறிப்பாக முதலில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான நிபந்தனைகளைப்பற்றி இங்கு பேசப்படவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதே சமயம் விடுதலைப் புலிகள் வெளிநாட்டு சமாதான குழுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடும் வரை சமாதானக் குழுக்கள் செயல்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தார்கள்

நாங்கள் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்டகால எல்லையை அறிவித்தோம். இக்காலஎல்லைக்குள் வெளிநாட்டு பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைப்பதாகவும் இது பற்றி உடனடியாக எமக்கு அறிவிக்குமாறும் கேட்டிருந்தோம். எமக்கு ஒரு திகதி அறிவிக்கப்பட்டது. அந்த தினத்தில் வெளிநாட்டு பிரதிநிதிகளை நாம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தோம்,

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் தலைவர் பிரபாகரனுடனும் கலந்து ஆலோசித்தார்கள்.

ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையுடன் வேறு சில நிபந்தனைகளும் சேர்த்துக்கொள்ளும் வரை சமாதானக் குழுக்களை செயல்படுத்தமுடியாது என வெளிநாட்டு பிரதிநிதிகள் திரும்பி வந்து எமக்கு கூறினார்கள்.

இந்தக் காரணங்களால் சமாதானக் குழுக்கள் செயல்படுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது. மறுபுறம் மீன் பிடிப்பதற்கு என்று ஒதுக்கப்பட்ட பிரதேசம் போதாது என்றும் ஆகவே அதை விரிவுபடுத்தவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் தற்போது கோருகிறார்கள். மீன் பிடிக்கின்ற கடற் பிராந்தியத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு கலந்துரையாடுவதாயின் அதற்குக் கால அவகாசம் தேவை என்றும் விடுதலைப் புலிகளுக்கு நாம் அறிவித்தோம். தற்போது வரையறுத்துள்ள மீன்பிடிப் பிராந்தியத்தை மேலும் விரிவுபடுத்துவதாயின் பாதுகாப்பு தொடர்பான பல பிரச்னைகள் எழும் எனவே தான் நாம் அதனை உடனடியாக அமுல்படுத்த முடியாதிருந்தது.

மூன்றும் கட்டப் பேச்சுவார்த்தையை நோக்கி முன்னேறியபோது சங்குப்பிட்டி-பூநகரி பாதையையும் ஆனையிறவுப் பாதையையும் போக்குவரத்திற்காக எம்மால் திறந்து வைக்கமுடியும் என்று அறிவித்தோம். இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது சங்குப்பிட்டி பூநகரிப் பாதையைப் போக்குவரத்துக்காக திறந்து வைப்பது என்பதன் அர்த்தம் அங்குள்ள இராணுவ முகாமை முழுமையாக அப்புறப்படுத்த வேண்டுமென விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தார்கள்.

அது இறுதி முடிவே ஒழிய ஆரம்பத்தில் அதனைச் செய்ய முடியாது என்று நாம் அறிவித்தோம்.

எமது பேச்சுவார்த்தைகள் தொடர்பாக தற்போது குழப்பநிலை ஏற்படுகின்றது. இந்த பேச்சுவார்த்தைகள் என்ன என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. பேச்சுவார்த்தை இரகசியமாக நடக்கவேண்டும் என்றும் நாம் ஒருபோதும் கூறியதில்லை. நாம் எங்களுடைய நடவடிக்கைகளை பகிரங்கமாகவே ஆரம்பித்தோம். இந்தப் பேச்சுவார்த்தையை நாம் எந்தவகையிலும் இரகசியமாக மேற்கொள்வதற்கு நாம் திட்டமிடவேயில்லை. நாம் பகிரங்கமாகத்தான் கொழும்பு திரும்பினோம். ஆகவே இந்த பேச்சுவார்த்தைகளின் போது எந்தச் சந்தர்ப்பத்திலும் இரகசியமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

ஜனாதிபதியும் அரசாங்கமும் இந்த சமாதான யாத்திரையை நிறுத்த தயாராக இல்லை, நிரந்தர சமாதானம் கிட்டும் வரை இந்த பேச்சுவார்த்தைகள் தொடரும். உறுதியான சமாதானம் கிட்டும் வரை சகல முயற்சிகளிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபட ஜனாதிபதியும் அரசாங்கமும் தயாராக இருக்கிறார்கள் எந்தவிதமான தடைகள் இருந்தாலும், இடையூறுகள் இருந்தாலும் அரசு வடபகுதியில் சமாதானத்தை நிலைநாட்டும் கடமையைத் தொடர்ந்து மேற்கொள்ளும். அரசு, தனது யோசனைகளை இரகசியமாக அமுல் செய்யாது. இந்த விடயத்தில் தனது கொள்கைகளைப் பகிரங்கமாக மேற்கொள்ளும்.

சமாதானப் பேச்சுக்களின் போது எனது தலைமையிலான அரச குழு, பிரச்னைகளைத் திறந்த மனதுடன் ஆராய்ந்தது இந்தப் பேச்சுவார்த்தைகள் யாவும் பரஸ்பரம் புரிந்துணர்வின் அடிப்படையில் இடம் பெற்றது.

அரசாங்கத்தின் ஈடுபாடு இல்லாமல் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. 1956ம் ஆண்டு முதல் சமூகப் பணிகளிலும், தொழிற்சங்கப் பணிகளிலும் அனுபவம் வாய்ந்தவர் என்ற வகையிலும், இனப் பிரச்னையை நன்கு புரிந்துகொண்டவர் என்ற வகையிலும் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டேன். இந்த விடயத்தில் ஏனைய அதிகாரிகளுக்கும் சிறந்த அனுபவமும், அறிவும் உண்டு.

ஜனாதிபதியின் முன் முயற்சி காரணமாக விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து மோதல் தவிர்ப்பு ஏற்பட்டது. சுகாதாரம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற வடபகுதி மக்கள் எதிர்நோக்கியுள்ள முக்கியமான பிரச்னைகள், ஆரம்பத்தில் தீர்க்கப்படும். இவற்றைத் தீர்த்து வைப்பதாக ஜனாதிபதி சந்திரிகா உறுதி அளித்துள்ளார் ரி-சி

## சந்திரிகாவை ஆதரிக்கப் போவதாக

# தமிழ் கட்சிகள் தெரிவிப்பு

[கொழும்பு]

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகள் மீண்டும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது தமிழ்க்கட்சிகளின் ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சி நாடியிருந்தது என்றும் அப்படியிருந்தபோதிலும் அந்தக் கட்சிகள் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு தமது ஒத்துழைப்பை வழங்கப் போவதாகவும் தெரிவித்திருப்பதாக பி. பி. சி சிங்களசேவை தெரிவித்தது.

இனப்பிரச்னை தீர்வுக்கு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கையில் இறங்கியுள்ளபடியால் தமது ஆதரவு பொதுசன ஐக்கிய முன்னணிக்கே என்றும் தமிழ்க் கட்சியின் தலைவர்கள் நேற்று பி. பி. சிக்கு தெரிவித்தனர்.

-ம-சி

### இன்று

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மேற்படி பாடசாலை அமைந்துள்ள யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்

### இராணுவ நலன்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாக பி.பி.சி. மேலும் தெரிவிக்கையில்: தன்னாட்சி பெற்ற மண்டல அரசுககு சட்டங்கள் இயற்றவும், அவற்றை நடைமுறைப் படுத்துவதான அதிகாரங்கள் உள்ளிட்ட பல அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

இந்தியாவில் நடைபெறுவது போல் அடிக்கடி மத்திய அரசு அதிகாரங்களை அடித்துச் செல்லாத வகையில் அது அமைய வேண்டும். தமிழ் மக்களின் பாதுகாப்பை எந்தச் சமஷ்டி அமைப்பும் கருத்திற் கொள்ளவேண்டும்.

அரசு தெரிந்தெடுக்கும் எந்த நாளிலும் நாலாம் கட்டப் பேச்சுககு புலிகள் தயாராக உள்ளனர். அரசு சமர்ப்பிக்கும் அரசியற் திட்டத்திற்காக புலிகள் காத்திருக்கின்றனர் அதற்கு ஏற்ற முறையில் புலிகள் விடை அளிப்பார்கள்.

மேற்கொண்டு முன்னேற்றம் காண நேருக்கு நேர் பேச்சுக்கள் நடத்துவது ஒன்றே வழி. தனிப்பட்ட முறையில் சில மூத்த அமைச்சர்கள் இந்த மதிப்பீட்டை சரியெனவே ஏற்கிறார்கள்.

பொருளாதாரத் தடையை முற்றாக நீக்க வேண்டுமென்று கடந்த இரண்டு மாதங்களாக கோரிவருகின்றோம்,

புலிகள் வசமுள்ள பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களான டீசல், இரசாயன உரங்கள், வாகனங்கள் கொண்டு செல்ல அனுமதிக்கவேணடும். அப்போது தான் இயல்புநிலை திரும்பியதாக சொல்லமுடியும்.

அமைதிப் பேச்சுக்களில் தற்போது ஏற்பட்டுள்ள முடக்க நிலைக்கான காரணம் இலங்கை இராணுவத்தினரின் மனப்பான்மை ஒன்றும் வடபுல மக்களின் அன்றாடப் பிரச்னைகளை விட இராணுவத்தின் நலன்களுக்கு அரசு முதன்மை கொடுக்கின்றது.

அரசின் நேர்மையை சந்தேகிக்கும் வகையில் புலிகளுக்கு எதிராக பிரசார இயக்கம் ஒன்றை அரசு தொடக்கியுள்ளது. அரசு அடியோடு தனது மனப்பான்மையை மாற்றிக் கொண்டு, பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்கி, இந்தத் தடைகளைக் கடக்கும் வழி வகைகளைக் காணவேண்டும்.

சுதந்திர நாடு என்ற கோரிக்கை நிறைவேற, நீண்டகாலப் போராட்டம் நடத்தவேண்டி இருக்கும் என்பதை விடுதலைப் புலிகள் உணர்ந்ததால் தான் பேச்சு மேசைக்கு வர முடிவு செய்தார்கள்.

அரசு கூடுதலான, புரிந்து கொள்ளும் தன்மையிலும், நடைமுறைச்சாத்தியம் உள்ள வகையிலும் விடுதலைப் புலிகளை அணுகவேண்டும். இன்றேல் வரலாற்றுமிக்க வாய்ப்பு ஒன்றை நழுவவிட்டவர்கள் ஆவோம் என்றார். -ம-சி

கொழும்பிலிருந்து

## அரச சரர்பற்ற நிறுவன 9பிரதிநிதிகள் வந்தனர்

[நெல்லியடி]

அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த ஒன்பது பிரதிநிதிகள் நேற்றுக்காலை 'சிடான்சர்' கப்பலில் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

ஏற்கனவே 22 பிரதிநிதிகள் விஜயம் செய்வதாக இருந்த போதும் 9 பிரதிநிதிகளுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர்களின் பெயர் விபரம்:

தேசிய கிறிஸ்தவ இளைஞர் மன்றத்தைச்சேர்ந்த ராஜா டீ சில்வா, கே. பி. ஏ. விஜயக்கோன், எஸ். சுகுணதாஸ், றெட்பாணாவைச்சேர்ந்தஒலின் பக்லறைற, கெரில்வின்சன் ஆகியோருடன் பிரெஞ் வைத்தியக் குழுவைச் சேர்ந்த பிராங்காஷ் நில்சன். மொனிக்டக்ஸ், சீ. குணநாயகா, சோ. றிபீயூ, கெயர் நிறுவனத்தைச் சேர்ந்த ஜேக்கப், போமன் ஆகியோரே வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்களை யாழ் நகரிலுள்ள அவர்கள் சார்ந்த நிறுவன பிரதிநிதிகள் பருத்தித்துறையிலிருந்து தமது வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.

160 சி

பனை அபிவிருத்திச் சபையின்

## ஆராய்ச்சி நிலையத்தை விரைவில் திறப்போம்

[நெல்லியடி]

கைதடியிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் ஆராய்ச்சி நிலையததை வெகு விரைவில் திறப்பதற்கு நடவடிக்கையை மேற்கொள்வேன்''

இவ்வாறு கொழும்பிலிருந்து நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்துசேர்ந்த இலஙகை பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவர் திரு. முருகேசு பாக்கியநாதன், பருத்தித்துறை இறங்குதுறையில்எமது நிருபருக்கு தெரிவித்தார்.

### கொழும்பு செல்லும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் எமது பணிமனையில் நாளை 13-ந் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சமூகமளிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கேட்டுள்ளார்.

—ரி

### டென்மார்க்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுக்கள் நடத்தலாம் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த கருத்தை நிராகரித்து விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றும் அனுப்பியிருந்தார். இவற்றுக்குப் பதிலாகவே ஜனாதிபதி சந்திரிகாவின் கடிதம் அமைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. —ரி-சி

### டென்மார்க்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின் தலைவர் விக்டர் பெரேரா அங்கு சென்றுள்ளதுடன் டென்மார்க் பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்து ஜனாதிபதியின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்துள்ளார்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் கூறுகையில், மாநாட்டுக்காக பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொள்வோர் மாநாடு நடக்கும் பகுதியினுள் உட்செல்ல முடியாது எனக் கூறினர்.

எனினும் மாநாட்டு பிரதேசத்திற்கு மிக அண்மையில் பேரணியில் கலந்துகொள்வோர் செல்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இந்த விஜயத்தை முடித்துக்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா லண்டன் செல்லவுள்ளார். அங்கும் ஆர்ப்பாட்டப்பேரணிகளை நடாத்த தமிழர் ஆயத்தம் செய்து வருகின்றனராம். சி

### 3 கட்ட

1ம் பக்கத்தொடர்ச்சி)

புலிகள் அரசிடமிருந்து எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார். —சி

### பிள்ளைகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகள் வைத்தியர்களை அழைத்து அவர்களை கண்காணித்து வரும் வேளையில் இலங்கை அரசாங்கம் மௌனம் சாதித்து வருகின்றது, என்றும் 'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்தது. —ம-சி

### வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு பிள்ளைகளின் தந்தையான தேசோமயானந்தன் (வயது 55), நாலு பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி ராசேந்திரம் (வயது 45) ஐந்து பிள்ளைகளின் தந்தையான தம்பிஐயா தர்மகுலசிங்கம் ஆகிய மூவருமே படையினரால் பிடித்து காங்கேசன்துறை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் தொடர்பான தகவல்களை பெற உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியைநாடியுள்ளனர். ரி

### பரீட்சார்த்திகளுக்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யப்பட்டுள்ளது.

இச் சேவையை பயன்படுத்திக்கொள்ள விரும்பும் பரீட்சார்த்திகள் அனைவரும் தமிழீழக் கல்விக் கழகத்தில் தங்களுடைய பெயர், முகவரியை இன்று 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமையிலிருந்து பதிவு செய்துகொள்ளலாம்.

பதிவின்போது அடையாள அட்டையையும், பரீட்சைக்கான அறிமுக அட்டையையும் காண்பித்துக்கொள்ளு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். —ரி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a News Pa... at the General Post ... mber B/16336/B-